**சைவத்தூதுவன் (சோவன்னா சானா ) சபாபதிப்பிள்ளையின்**

**108 வது பிறந்த தினமும்**

**தமிழ்க்காவலன் உயர்வாசல் முருகன் இல்லத்தில்**

**29 வது நினைவுத் திருவாசக விழாவும்.**

உயர்வாசற் குன்று முருகன் ஆலயத் திருவாசக விழா 2018 வழமை போல் ஆலயமண்டபத்தில் திருதிருமதி குமாரசாமி சிதம்பரப்பிள்ளை தம்பதியினர் மங்கள விளக்கேற்ற, ஸ்ரீ நல்லூர்தாச ரவி குருக்களின் சிவபூசையுடனும் ஆசியுரையுடனும் ஆரம்பமாகியது.

விழா மண்டபம் சைவத்தமிழ்ப் பெற்றோர் பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் என மூன்று தலைமுறையினரை உள்ளடக்கிய பல குடும்பத்தினரால் நிறைந்து, மிகவும் எழுச்சியான, உணர்வு பூர்வமான சூழலை உருவாக்கியிருந்தனர்.

**தூரநோக்கினை கொண்டிருந்த தீர்க்கதரிசியான திரு.சபாபதிப்பிள்ளை ஐயாவின் பிறந்த நாளையொட்டி**, அன்னாரை மிகுந்த நன்றி உணர்வுடன் நினைவுகூரும் முகமாக, ஆண்டுதோறும் கோலாகலமாக கொண்டாடப்படும் திருவாசகப் பெருவிழாவில், திரு.கு.சிதம்பரப்பிள்ளை அவர்கள், சோவன்னா சானா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், மற்றும் அவரது ஆரம்பகாலத்து, புலம் பெயர் சைவத்தமிழருக்கு ஆற்றிய, அளப்பெரிய சேவையினையும் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும், எடுத்துரைத்தார்.

இவ்வுரையானது, இந்தத் தலைமுறையினர் தாம், அடுத்து வருகின்ற தலை முறையினருக்கு, எந்த விதத்தில் சைவத்தையும் தமிழையும் கையளிக்கப் போகின்றோம் என்ற பெரும் கேள்வியினை அவையில் குழுமியிருந்த மூத்தவர்களின் சிந்தனையில் தோற்றுவித்திருக்கும் என்பதில், எந்த விதமான சந்தேகமும் இருக்கமுடியாது.

இவ்விழா, மாணிக்கவாசக சுவாமிகள் தனது வாழ்நாள் காலத்தில் இறைவனை தன்னகத்தே அகக் கண்களால் கண்டு, தன் உணர்வினை தேன்மொழியாக திருவாசகத்தில் வடித்துத் தந்துள்ளமையியால்தான், **“திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகாதோர்”** என, சைவசித்தான்தத்தின் மிக உயர்ந்த உண்மைத் தத்துவத்தினை, கொண்டாடும் முகமாக தெரிவு செய்த விழாவாக தொடர்ந்து, வருடாவருடம் திரு. சோ.சபாபதிப் பிள்ளை ஐயாவின் நினைவாக, நன்றியுணர்வுடன் அரங்கேறிவருகின்றது.

அன்றைய தினம் சைவத்தமிழ் சமூகம் சார்ந்த இளைய தலை முறையினர் வழங்கிய, பண்ணிசைப் பாடல்கள் மற்றும் நடன நிகழ்சிகள் எனப் பல உன்னதமான பங்களிப்புக்கள் இடம்பெற்றன. சகல நிகழ்ச்சிகளுக்கும் அவர்களே பக்கவாத்திய இசையினையும் வழங்கி மண்டபத்தில் குழுமியிருந்தவர்களை மகிழ்வித்தனர். அவர்களைப் பயிற்றுவித்த பெற்றோரும் ஆசிரியர்களும் பாராட்டுக்கு உரியவர்கள். இவர்களை வரும்காலம் நிட்சயம் நினைவுகூரும். இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அனைவருக்கும் பரிசில்களும் சான்றிதள்களும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர்.

இளையவர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கிடையில் திருவாசகம் எனும் பொருளில் திரு மா. இந்துசேகரன் , கற்பகவினாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் வசந்தக் குருக்கள், மற்றும் எட்மண்டன் நாகபூசணி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் கமலநாதக் குருக்கள் ஆகியோர் ஆழமாகவும் அறிவுசார்ந்தும் நகைசுவையாகவும் உரையாற்றியமை தமிழும் சைவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதை, சபையோர் அனைவருக்கும் நினைவு படுத்தியது.

விழாவின் இறுதியாக திரு. சோ. சபாபதிப்பிள்ளை ஐயாவின் கனவு, அதாவது, அவர் தன் வாழ்நாள் காலத்தில், தனது நேரத்தையும் பொருளையும் அர்ப்பணிப்புடன் செலவு செய்து, தனது சமூகம் சார்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும், அரும்பாடுபட்டு உழைத்த உழைப்பின் பலனை இன்றைய சமூகம் முழுமையாக அனுபவிக்கின்றதா ?. அதேவேளை, அடுத்து வருகின்ற இளைய சந்ததியினர் எந்தளவுக்குத் தமது சமூகம் சார்ந்த சிந்தனையுடன்,

தத்தமது காலக் கடமைகளைச்  செய்வதற்கு, சரியான தூர நோக்கினைக் கொண்ட திட்டமிடலின் மூலம் தயார்செய்யப் பட்டு, தமது பொறுப்புக்களை ஏற்று, முன்னோக்கி நகர்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்களா எனும் கேள்விகளை, நம்மை நாமே கேட்டுக் கொண்டால், கிடைக்கும் பதில் என்னவாக இருக்கம் என்பதனை அறிவதற்கு, பூதக் கண்ணாடியின் உதவியை நாடவேண்டிய அவசியம் இல்லை என்றும், **சோவன்னா சானாவின்** கனவு நனவாக வேண்டுமானால், சைவமும் தமிழும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து இணைந்து பிரயாணம் செய்யும் பொழுது, ஒன்று மற்றையதைக் கைகொடுத்து தூக்கிவிடமுடியம் எனவும்,

**தமிழ் இல்லாத சைவமும், சைவம் இல்லாத தமிழும் நீடித்து நிலைத்து  நிற்க மாட்டாது**, ஏனெனில், தமிழ் மொழி பேச்சு வழக்கு அழிந்து போகின், சைவத்தில் திருமுறை ஓதுதல் நின்று போகும். திருமுறை இதிகாசங்கள் புராணங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து விடும். **எனவே கோவில்களில் தமிழ் உள்வாங்கப்பட்டு வளர்க்கப்படுமாயின், சைவமும் தமிழும் நீடித்து நிலைத்து நிற்கும்.** எனவே எம் முன்னவரின் கனவுகள் நனவாக வேண்டுமாயின் பொறுப்பானவர்கள், உரிய நடவடிக்கைகள் சீரய முறையில், துரிதமாக எடுக்கப்பட வேண்டும் என திரு சிவ பரிமேலழகர் தனது உரையில் வேண்டுகோள் வைத்திருந்தார்.

திருவாசக விழா இரவு போசனத்துடன் இனிதே நிறைவு பெற்றது.